2022 ஜனவரி 7] *[திரு. இ. பெரியசாமி]*

கடன் வழங்க வேண்டியது சங்கத்தின் பணி என்பதையும் கருத்தில் கொண்டு, இவ்வகையான விதிமீறல்கள் இனி நடைபெறாவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுதிசெய்து, விவசாயிகளின் நலனை முன் நிறுத்தி, இப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்வினை சிறப்பினமாகக் கருதி, மேற்கூறிய விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தள்ளுபடி சான்றுகளை வழங்கலாமெனவும், அவர்களுக்கு மீண்டும் தொடர்ந்து பயிர்க் கடன் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள 51,017 விவசாயிகளுக்கு ரூ.501.69 கோடி அளவிற்கு பயிர்க் கடன் தள்ளுபடி வழங்கப்படும் என்பதையும், அவர்களுக்கு நடப்பாண்டில் மீண்டும் பயிர்க் கடன் வழக்கம்போல தொடர்ந்து வழங்கப்படும் என்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இனிவருங்காலங்களில் இத்தகைய தவறுகள் நிகழாதவண்ணம் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இன்று பொதுக் கணக்குக் குழு ஆரம்பித்த நூற்றாண்டை நெருங்க இருக்கிறோம். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தில் ஏற்படுத்தப்பட்ட பொதுக் கணக்குக் குழு 1921 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. முதன்முதலில் அந்தக் குழுவின் தலைவராக* Thiru W.M. Hailey *அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். கடந்த நவம்பர் மாதம் 2021 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே நடைபெற்ற விழாவில் மேதகு குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த், மேதகு துணை குடியரசுத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு, மாண்புமிகு மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா அவர்களும் கலந்து கொண்டார்கள். இந்தியாவிலுள்ள அனைத்துக்*

கட்சிகளுடைய தலைவர் பெருமக்களும் கலந்து கொண்டார்கள். அதிலே சிறப்பு என்னவென்றால், நாம் அடுத்த ஆண்டு, இதே நாளில் நூற்றாண்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே இங்கே கொண்டாடவிருக்கிறோம் என்ற சிறப்பு செய்தியை இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

Comptroller and Auditor General of India ஒவ்வொரு மாதமும் அறிக்கையை பாராளுமன்றத்திற்குத் தாக்கல் செய்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மேதகு குடியரசுத் தலைவர் முன்பு அங்கிருக்கின்ற பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழுத் தலைவர் அவர்கள் பேசும்போது, இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்படுகின்ற மாநிலம், கடந்த 6 மாதங்களாக தமிழகம் என்பதை பாராளுமன்றத்திலே அவர் உச்சரித்தார். என்னுடன் நம்முடைய பேரவைச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் அவர்களும், இணைச் செயலாளர் திருமதி தேன்மொழி அவர்களும் கலந்துகொண்டார்கள். இந்த நற்சான்றிதழை, இந்த வெகுமதியை இந்தப் பெருமையை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன். தொடர்ந்து ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இந்தச் சிறப்பை நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரேயொரு செய்தி நினைவுக்கு வருகிறது. முதன்முதலில் 1947 ஆம் ஆண்டு சண்முகம் செட்டியார் என்ற தமிழர்தான் அங்கே தலைவராக இருந்திருக்கிறார். புரட்சியாளர் அம்பேத்கர் அரசமைப்புச் சட்டத்தை எழுதும்போது, இதை உள்வாங்கி இக்குழு எப்படிச் செயல்பட வேண்டுமென்று வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, பொன்மொழிகளில் எனக்குப் பிடித்த மொழி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னது, 'நீ, நான் என்று சொன்னால் உதடுகள் ஒட்டாது; நாம் என்று சொன்னால்தான் உதடுகள் ஒட்டும்' என்ற இந்தப் பெருமையை இந்த அவையிலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 4 முதல் 12 வரையிலான 9 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.